# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2362/79 – 2023 දෙසැම්බර් මස 15 වැනි සිකුරාදා – 2023.12.15

***2362/79 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

***(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)***


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2013, மே மாதம் 28 ஆந் திகதிய 1812/ 7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 165 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப் பட்டுள்ளதோடு. அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும், அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல.: 4-3/10/2012/UDA/368.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.: ප්‍රාලේ/ඉම/ඉ3/2/A.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 15.

**அட்டவணை**

தென் மாகாணம் காலி மாவட்டம், இமதுவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 172, இமதுவ கிராம அலுவலர் பிரிவில் இமதுவ கிராமத்திம் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால்




*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*தயாரிக்கப்பட்ட 2023.09.01 ஆந் திகதிய,* GA/IMD/2023/235 *ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:*

*01.* **துண்டு 'D' - கொடகும்புர, கபலவில மற்றும் கபலவில கும்புர - விஸ்தீரணம் : 0.0144 ஹெக்டயார்**

*வடக்கு :ஆ.வ.கா 4089 இல் துண்டு இல. 49, ஆர்.எச்.சிறியாங்கனி, எஸ்.கே.பதிரண மற்றும் சிட்னி ஜயசேகர உரிமைகோரும் கபலவில; கிழக்கு: ஆர். எச். சிறியாங்கனி, எஸ்.கே. பதிரண மற்றும் சிட்னி ஜயசேகர மற்றும் ஏ. எஸ்.கே. பரணவிதான உரிமை கோரும் கபலவில; தெற்கு : ஏ. எஸ்.கே. பரணவிதான, எம். வி.திலகசிறி சமரவீர மற்றும் எம்.வி.வசந்தா பத்மிணி சமரவீர உரிமைகோரும் கபலவில; மேற்கு: எம். வி. திலகசிறி சமரவீர, எம். வி. வசந்த பத்மிணி சமரவீர மற்றும் ஆர். ஜீ. ஜினதாச உரிமைகோரும் கபலவில.*

EOG 12 - 0257

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய 1830/51 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 300 ஆம் இலக்க கட்டளை மற்றும் அந்த கட்டளைக்கு திருத்தம் செய்யப்பட்டு 2014, யூன் மாதம் 25 திகதிய 1868/ 51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 300 ஆம் இலக்க கட்டளையின் பிழை திருத்த பத்திரத்தில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உப்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல.: 4-3/10/2012/LRB/234.
காணி எடுத்தல் உத்தி. இல.: WGSWD&EIP/ACQ/MH/07.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 15.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செலாளர் பிரிவில் இல. 526/D ஜம்புகஸ்முல்ல கிராம அலுவலர் பிரிவில் கங்கொடவில(மஹரகம நகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் *தயாரிக்கப்பட்ட 2023.10.16 ஆந் திகதிய* CO/DSO/2023/448 *ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:*

*01.* **துண்டு 'A' - குணவர்தன உயன்வத்தை - விஸ்தீரணம் : 0.0279 ஹெக்டயார்**

*வடக்கு : ஆ. வ. கொ 9628 இல் துண்டு இல. 10 மற்றும் 7; கிழக்கு: ஆ. வ. கொ. 9628 இல் துண்டு இல. 7 மற்றும் 10; தெற்கு : ஆ. வ. கொ. 9628 இல் துண்டு இல. 10 ; மேற்கு: ஆ. வ. கொ. 9628 இல் துண்டு இல. 10 (வீதி).*

EOG 12 - 0256